# ஒரிஸா அகதி முகாமிலிருந்து 800 ஈ.பி.ஆர்.எல்.எப்.வினர் தப்பி ஓட்டம்; பதினைந்து பேர் ஒரிஸா காட்டில் கைது

ஒரிஸா மாநில 'கோரபட்' இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஆயிரத்து அறுநூறு இலங்கையர்களில் சுமார் எண்ணூறு பேர் அம்முகாம்களில் இருந்து தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தப்பி ஓடியவர்களில் பெரும்பான்மையோர் ஈ. பி. ஆர். எல் எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு தப்பியோடிய இலங்கையரைக் கண்டுபிடிக்க சுமார் இரண்டாயிரம் இந்திய இராணுவத்தினர் ஒரிஸ்ஸா காடுகளில் தேடுதல் நடாத்தி வருகின்றனர். இதுவரை பதினைந்துபேர் ஒரிஸ்ஸா காடுகளில் இருந்து இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு நகருக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் ஒரிஸ்ஸா காடுகளில் சிறிது காலம் தங்கியிருந்துவிட்டு இரகசியமாகத் தமிழ்நாட்டுக்குள் புகுவதற்கே தப்பியோடியவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் என ஒரிஸ்ஸா மாநில அதிகாரிகள்

—6 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் ஆறு விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 44 செவ்வாய் 20-03-1990 (பங்குனி 07) ஷஃபான் 22

# வடக்கு கிழக்கில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

வடக்கு கிழக்கில் அன்னை பூபதிக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாக துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது மட்டக்களப்பில் இந்திய அரசிடம் இரு கோரிக்கைகளை முன்வைத்து 88 மார்ச் 19 இல் உண்ணாவிரதமிருந்து ஒரு மாதத்தின் பின்னர் ஏப்ரல் 19-ம் திகதி மரணமானார். இவரது இரண்டாவது நினைவஞ்சலித் தினம் நேற்றுக் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கின் நகர்களிலும், சந்திகளிலும் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. வீதிகள் தோறும் வாழை மரங்கள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. துக்கத்தை அனுஷ்டிக்கும் முகமாக கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. இந்த நினைவு தினக் கொண்டாட்டங்கள் நேற்று முதல் ஒரு மாதத்திற்கு நடைபெறும். நேற்று யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது அதில் நடராசா பாலச்சந்திரன் உரையாற்றுகையில்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# மாகாண பொலிஸில் சேர தமிழ் இளைஞருக்கு புலிகள் அழைப்பு

## தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கிய நடவடிக்கை இது - அன்ரன் பாலசிங்கம்

மாகாணசபை பொலிஸ் படையில் சேருவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளதாகப் புலிகளின் ஆலோசகர் திரு: அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். நேற்று முரசொலிக்கு அளித்த பிரத்தியேக பேட்டியிலேயே இவ்வாறு கூறினார்.

முன்னர் புலிகள் பொலிஸ் நிர்வாகத்திற்கு எதிரானவர்களாய் இருந்தனர். அதனால் இளைஞர்கள் பொலிஸ் படையைச் சேரப் பயந்தனர். இப்போது அப்படியல்ல. முதற் தடவையாகப் பொலிஸிற் சேருமாறு நாம் கூறுகின்றோம் என்றும் அவர் கூறினார்.

தமிழ்ப் பகுதியில் தமிழ்ப் பொலிஸாரும், முஸ்லிம் பகுதியில் முஸ்லிம் பொலிஸாரும் கடமையாற்ற இது உதவும். இது தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக அமையும்.

— 6 ஆம் பக்கம் பார்க்க

தமிழீழ விடுதலைப் புலிகள்

# 2-ம் தவணை ஆரம்பம் முதல் இருநேரப் பாடசாலைகள்

எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் சகல யாழ். மாவட்ட ஏ, பி. 1 சி இரண்டாந்தரப் பாடசாலைகளும் இருநேரப் பாடசாலைகளாக இயங்கும்

இதற்கான சுற்று நிருபங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் யாழ். கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பமாகும் மே இரண்டாம் திகதி தொடக்கம் இது நடைமுறைக்கு வரும்

# புதிய சரக்கு ரயில் சேவை

யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்குமிடையே புதியசரக்குரயில்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதனால் தற்சமயம் இடம் பெற்றுவரும் எரிபொருட் தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடும் என யாழ்புகையிரதநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரைகாலமும் அநுராதபுரத்திற்கும் காங்கேசன் துறைக்குமிடையே சரக்குரயில் சேவைஇடம் பெற்று வந்தது. புதிய சரக்குரயில் நேற்றைய தினம்தனது சேவையை ஆரம்பித்திருந்தது. (03)

**உள்ளே**

இந்திய உளவு ஸ்தாபன ரோ பற்றி ஜூனியர் விகடனில் வெளிவந்த கட்டுரை

பக்கம் 3

# வீதி ஒழுங்கை கடைப்பிடித்து ஒத்துழைக்கக் கோரிக்கை

யாழ்நகர போக்குவரத்து, வீதி ஒழுங்குகள் இன்றுமுதல் அமுலுக்கு வருகிறது இந்த வீதி ஒழுங்கு விதிகளை யாழ் மாநகரசபையின் பதினைந்து ஊழியர்கள் கவனிப்பார்கள்.

தமிழ்மக்களின் நலன்கருதி சீர்குலைந்துள்ள சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் முகமாகவும், போக்குவரத்து வாகன நெருக்கடிகளால் ஏற்படும் வீதி விபத்துக்களையும் அதனால் ஏற்படும் அநாவசிய

—6 ஆம் பக்கம் பார்க்க

# மா. சபையை ஒப்படைக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியும் அமைச்சரவையும் எம்மிடம் கிடைக்கும் பட்சத்தில் மாகாணசபையை சீராக இயங்க வைக்கும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத்துமாறு நாம் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும்,

—6 ஆம் பக்கம் பார்க்க

# பாக். அமைச்சர் - ஜனாதிபதி சார்க் மாநாடு பற்றிப் பேச்சு

பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் யாகூப்கான் நேற்று மாலையில் இலங்கை வந்து சேர்ந்தார். இவரை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன விமான நிலையத்தில் சந்தித்து பேச்சுக்களை நடாத்தினார். இன்று பாகிஸ்தானிய அமைச்சர் ஜனாதிபதி பிரேமதாஸவை சந்திக்கவுள்ளார்.

சார்க் மாநாடு நடாத்துவது குறித்து ஏனைய சார்க் நாடு

—6 ஆம் பக்கம் பார்க்க

# மாவிட்டபுரம், காங்கேசன்துறை இந்தியப்படை நேற்று வாபஸ்

(வலிகாமம்)

மாவிட்டபுரம், காங்கேசன் துறையின் பெரும் பகுதிகளிலும் இருந்து நேற்று இந்தியப் படையினர் வெளியேறியுள்ளனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்னிருந்த முகாமும் அகற்றப்பட்டதுடன் காங்கேசன்துறை-பலாலி சந்திவரையுள்ள சகல காவல் நிலையங்களும் அகற்றப்பட்டன.

நண்பகல் படையினர் வெளியேறியதும் மக்கள் வெடி கொழுத்தி ஆரவாரம் செய்தனர்.

மாணவர்களும் கல்லூரி முன்பு புலிக்கொடி ஏற்றி மகிழ்ச்சி ஆரவாரம்செய்தனர்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# எயிட்ஸ் கர்ப்பிணிக்கு உதவ பிரிட்டன் உபகரண உதவி

இலங்கையின் பிரச்சினைக்குரிய நோயாளியான எயிட்ஸ் நோயினால் பிடிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவ உதவிக்கென பிரிட்டனில் இருந்து பல வைத்திய உபகரணங்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இலங்கைச் சுகாதார அதிகாரிகள் விடுத்த அவசர வேண்டுகோள்களையடுத்தே பிரிட்டன் வைத்திய உபகரணங்களை உடனடியாகக்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் போதியளவு மா களஞ்சியத்தில் இருந்தும் ப. நோ. கூ. சங்கங்களில் தட்டுப்பாடு

வடக்கில் கோதுமை மா போதியளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள போதும் ஒரு சில ப. நோ. கூ. சங்கங்களில் மா தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வியாபாரிகள் கறுப்புச் சந்தைகளிலே மாவைப் பெற்றுவருகின்றார்கள். இதனாலே பொதுமக்களுக்கு தனியார் கடைகளில் கூடுதலான விலைக்கு மாவிற்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

சில ப. நோ. கூ. சங்கங்களில் காணப்படும் பணப்பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரியவருகின்றது. (03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு விளம்பரம்

**புத்தகங்கள்**

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். புத்தகம் கட்டுபவர் தேவை SENATHIRAJAH Second Hand Book House 13/6 ஸ்ரான்லி வீதி, முரசொலிக்குமுன் கண் சிகிச்சைலேன் யாழ்ப்பாணம். 03161


வடமராட்சி கிழக்கு மக்களுக்கு இப்படியொரு அவலர்;

# கிராமசேவையாளர் பிரிவு யாழ். மாவட்டத்துடன் பதிவாளர் பிரிவு கிளிநொச்சி மாவட்டத்துடன்

வடமராட்சி கிழக்குப்பகுதியிலுள்ளசுண்டிக்குளம், போக்கறப்பு முள்ளியான் கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்டமக்கள் இதுவரைகாலமும் முள்ளிப்பற்று பதிவுகாரரிடம் பிறப்பு இறப்பு பதிவுகளைப் பதிந்து வந்தனர்.

தற்போது முள்ளிப்பற்றுப் பகுதி கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளமையால் யாழ்ப்பாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிளிநொச்சி புதிய பதிவாளர் அலுவலகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம்,போக்கறப்பு, முள்ளியான் கிராமசேவையாளர் பிரிவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளமையால் கிளிநொச்சி மாவட்டத்தில்அமைந்துள்ள முள்ளிப்பற்றுப் பதிவு காரரிடம் இப்பகுதி மக்கள் பிறப்பு இறப்புகளை பதிவு செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

ஆகவே மேற்குறிப்பிட்ட மூன்று கிராமசேவை அலுவலகர் பிரிவுகளைஉள்ளடக்கிய புதிய பதிவுகாரர் பிரிவு ஒன்றை ஆரம்பிக்குமாறு இப்பகுதி பொதுமக்கள், பொது ஸ்தாபனங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர், பெரும்பாகப் பதிவுக்காரர் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். புதிய பதிவுகாரர்பிரிவு ஆரம்பிக்கும் வரை இப்பகுதிபிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்வதற்கு தற்காலிக ஒழுங்கு செய்து தரும்படி மகஜரில் குறிப்பிட்டுள்ளது. (18)

# மகாபொல பெறும் மாணவர் கூட்டம்

மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்காகப் பண்டாரகம செல்வதற்கான ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்கென மகாபொல பரிசில்பெறுகின்ற யாழ் பல்கலைக்கழக1 ம்வருட மாணவருக்கான பொதுக்கூட்டம் ஒன்று 22ம் திகதி வியாழக்கிழமைபிற்பகல்நான்கு மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்திற்கு சகல பீடங்களையும் சேர்ந்த மகாபொல பரிசில் பெறும்1ம் வருட மாணவர்கள் தவறுமற் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# முகாமைத்துவப்பயிற்சி நிலையம் ஏப்பிரல் முதல் இயங்கும்

யாழ். பிராந்தியகல்வி முகாமைத்துவப் பயிற்சி நிலையம் ஏப்ரல் மாதம் முதல் செயற்படவுள்ளது. இந்த நிலையத்திற்குச் சொந்தமானகட்டடம் ஒன்றை நிறுவுவதற்கு கல்வியமைச்சு 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

புதிய கட்டட வேலைகள் முடியும் வரை கல்வி முகாமைத்துவப் பயிற்சி நிலையம் யாழ். கோட்டக் கல்வி நிலையக் கட்டடத்திற் செயற்படுமென இந்நிலையத்திற்குப் பொறுப்பான கல்வியதிகாரி கே. தணிகாசலம் தெரிவித்துள்ளார். (6)

# சமூக விரோதிகளைக் கவனிக்க தனியான பொலிஸ் பிரிவு

ஆயுதக்கடத்தல், போதைப் பொருள் கடத்தல், கள்ள நோட்டு அச்சிடல், கள்ளச் சாராய உற்பத்தி ஆகிய சமூக விரோதச் செயல்களைக் கண்காணித்து நடவடிக்கையெடுக்கவென விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

தற்பொழுது நாட்டில் இத்தகைய செயல்கள் வெகுவாக அதிகரித்து வருவதை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பொலிஸ் பிரிவு மேற்குறிப்பிட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய முழு விபரங்களையும் கொண்டிருப்பதுடன். அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கக்கூடிய அதிகாரங்களையும்உள்ளடக்கியதாகஅமையும்

# செஞ்சிலுவைச் சங்க கொடி தினம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்த நாடளாவிய கொடிதினம் இம்மாதம் 22, 23, 27ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.இச்சேகரிப்பின் மூலம் பெறப்படும் பணம் நிவாரணபுனர்வாழ்வு வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் 22, 23, திகதிகளில் பாடசாலைகளிலும் 27ம் திகதி பொதுமக்கள் முன்னிலையிலும்கொடிவிற்பனை இடம்பெறும என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவு அறிவித்துள்ளது.


## ஓராண்டு நினைவு அஞ்சலி



### இராமு கதிரவேலு (கண்டு)

தோற்றம் 27.7.1935 மறைவு 1:4.1989

அன்புடன் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்தும் எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

21-3-90 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம் பெற இருக்கும் கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கோவிற் கடவை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி

இங்ஙனம்
மனைவி, மக்கள்

03164


# வைக்கோலில் இருந்து மின்சார எரிவாயு உற்பத்தி

வைக்கோலில் இருந்து அதிக செலவும், சிரமமுமின்றி எரிவாயுவை உற்பத்தி செய்யும் முயற்சி வெற்றியளித்துள்ளது.

இந்த எரிவாயுவை விளக்குகளுக்கும், சமையலுக்கும் மட்டுமன்றி மின்சக்தியாக மாற்றி மின்சாரமாகவும் பயன்படுத்த முடியும்.

நெற்பயிர் செய்யப்படும் வயற்பிரதேசங்களில் அதிக செலவின்றி இந்த இயற்கை எரிவாயு நிலையங்களை அமைத்துக்கொள்ள முடியும்.

இதற்கு தண்ணீர் தேவைப்படாததால் வரட்சியான பிரதேசங்களிலும் இத்திட்டத்தை அமுல் செய்யக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் இவ் உற்பத்தியின்போது பெறப்படும் கழிவை பயிர்களுக்கான சிறந்த இயற்கை உரமாகவும் பயன்படுத்தமுடியும்.

# மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் நூல் நிலையத்திற்குச் சமூக, பொருளாதார அரசியல் நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் கழக நிர்வாகத்துடன் நேரிலோ அல்லது தபாலிலோ தொடர்பு கொள்ளுமாறு மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இடமாற்றம்

வவுனியா இலங்கை வங்கி முகாமையாளராக கடந்த மூன்று ஆண்டுகாலம் சேவையாற்றியதிருமதி கமலராணி துரைராஜா யாழ்மாவட்ட இலங்கை வங்கி பிரதம முகாமையாளராக பதவி உயர்வுடன் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (11)


விஞ்ஞானம்

## இரா. செல்வவடிவேல்

வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புக்கள் யாவும் நடைபெறுகின்றன

இல: 2, சீனிவாசகம் வீதி, கொட்டடி
யாழ்ப்பாணம்.

03166



★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும்

★ ஈராக்

நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. விவசாய மேற்பார்வையாளர் | (2) | I. D 130 |
| 2. கிளீனஸ் மேற்பார்வையாளர் | (2) | I. D 125 |
| 3. கார் பெயின்டர் | (20) | I. D 100 |
| 4. தச்சு தொழிலாளர் | (20) | I. D 80 |
| 5. மேசன் தொழிலாளர் | (20) | I. D 80 |
| 6. பிற்றர் (பொருத்துபவர்) | (20) | I. D 80 |
| 7. விவசாயத் தொழிலாளர் | (50) | I. D 65 |
| 8. கனரக வாகனச் சாரதி | (4) | I. D 110 |

(உணவு, வைத்தியம், தங்குமிடம் இலவசம்)
6 புகைப்படம், கடவுச்சீட்டுடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.

## V·T·R·TRAVELS

41,3rd Cross Street Jaffna

03112



## முக்கிய அறிவித்தல்

# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

யாழ்ப்பாணம், பெரியகடை வீதி, 24/1 ஆம் இலக்கத்திலிருந்துவந்த எமது கிளை ஸ்தாபனம் கொழும்பு, இரண்டாம் குறுக்குத்தெரு 107 - 111 ஆம் இலக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

★ நம்பிக்கை ★ நாணயம்

மிகுந்த உத்தரவாதமான எமது சேவையை விரும்புவோர் கீழ்க்காணும் விலாசங்களில் எம்மைத் தொடர்பு கொள்க

**தலைமைச் செயலகம்:**
33, முதல்மாடி
நியூ ஜெமினி கொம்பிளெக்ஸ்
602, மவுண் ரோட், தமிழ்நாடு
சென்னை 600006
இந்தியா
போன் ( 475382
( 8250779

**கொழும்புக் கிளை:**
107 - 111, இரண்டாம குறுக்குத்தெரு
6 A, இரண்டாம் மாடி
மெட்ரோ ட்ரேட் சென்ரர்
(Super Market)
கொழும்பு-11
[Habib Bank அருகாமையில்]

03168


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகால அரசியல் முதிர்வின் வெளிப்பாடு

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அரசியல் வாழ்க்கையில் நேற்றுடன் நாற்பது ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது.

இந்த நாற்பதாண்டு கால அரசியல் வாழ்வில் கடைசி தசாப்தம் ஜனாதிபதிக்குப் பல்வேறு நெருக்கடிகளையும், சோதனைகளையும் ஏற்படுத்தியகாலம்.

பிரேமதாஸ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது நாடு மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் மீள ஆரம்பித்த ஜே.வி.பி யினரின் அரசுக்கெதிரான போராட்டம் எண்பத்தொன்பதில் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது.

தென்னிலங்கையில் பெரும்பாலான பகுதிகள் ஜே.வி.பி யினரின் கட்டுப்பாட்டிலிருந்தது. வடக்கு-கிழக்கு மாகாணங்களிலோ ஏறத்தாழ எழுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியப்படைகள் குவிக்கப்பட்டிருந்தன.

87-ல் இலங்கையின் ஜனாதிபதியாகவிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கும், இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமன்றி தமிழ் மக்கள் மத்தியில் கூட அதிருப்தியினையும், பாரிய எதிர்ப்பினையும் பெற்றிருந்த காலம்.

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 20—03—1990

நல்வாக்கு

நாமோ ஓய்ந்திருக்க விரும்புகிறோம், நமது சிந்தனைகளோ நம்மை அப்படியிருக்க விடுவதில்லை.

—மக்சீம் கோர்க்கி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

வடக்கு-கிழக்கிலோ அரசாங்கத்தின் ராணுவவியல் நிர்வாகம்கூட எள்ளளவேனும் இல்லை.

தென்னிலங்கையில் ஜே.வி.பியின் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அரசின் தொலைத்தொடர்புச் சாதனங்கள் கூட செயற்பட முடியாது தொலைக்காட்சி, வானொலி ஊழியர்களின் வரவு மிகக் குறைவாக, இராணுவத்தினரே அவற்றைக் கையேற்று நடத்துமளவிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

மகாவலி கங்கையிலும், களனி கங்கையிலும் கணக்கிட முடியாத சடலங்கள் மிதந்து வந்தன. தெருவோரங்களிலோ ரயர் போட்டு அரை குறையாய் எரிந்த நிலையில் சடலங்கள்.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போது இந்திய இராணுவத்தை வெளியேற்றி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வேன் என்றும், நாட்டில் வறுமையை ஒழித்து அமைதி ஏற்பட வழிவகுப்பேன் எனவும் குறிப்பிட்டார்.

சிறுபான்மையினரை நியாயமாக நடாத்துவது, விலகிச் சென்றுவிட்ட இளையசமுதாயத்தினரை வழிப்படுத்துவது, நாட்டிலிருந்து வறுமையை முற்றாக ஒழிப்பது என்ற முக்கியமான குறிக்கோள்களைச் செயற்படுத்துவதில் ஜனாதிபதி இன்று முனைப்பாக உள்ளார்.

ஜே.வி.பியினரின் அணிவோர் பிடுங்கப்பட்டுவிட்டது. விடுதலைப் புலிகளுடன் அமைதி நிலை தொடர்பாக தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றது. இந்தியப் படை நாட்டிலிருந்து முற்றாக இம்மாதத்துடன் வெளியேறவுள்ளது.

இவையனைத்தும் ஜனாதிபதியின் நாற்பது ஆண்டுகால அரசியல் வாழ்வின் அனுபவமுதிர்வின் விளைவுகளாகும்.

தமது அரசியல் வாழ்வின் நாற்பத்தோராவது ஆண்டில் இன்று காலடி வைக்கும் ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் தனது அனுபவத்தினையும் அரசியல் முதிர்வினையும் அடிநாதமாகக் கொண்டு, மீண்டும் எண்பதுகளில் இரத்தக்களறி ஏற்பட்டதுபோன்ற நிலைமைக்கு இடமளிக்க மாட்டார்.

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைக்க முனைப்புடன் செயலாற்றுவார் என்று எதிர்பார்ப்போமாக.

இந்திய உளவுப் பிரிவு 'ரோ' பற்றிய தகவல்கள்

# உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சலசலப்பை ஏற்படுத்தும் 'ரோ'

திரேன் பகத் ஆங்கிலப் பத்திரிகைத்துறையில் ஒரு பிரகாசமான எரிநட்சத்திரம் போல் திடீரென வந்து மறைந்த இளைஞர். அஜமீரில் கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படித்தார். 1982-ல் 'சண்டே அப்சர்வர்' இதழில் திரேன் பகத் எழுத ஆரம்பித்தபோது, அவருக்கு வயது இருபத்தைந்துதான்! அடுத்து ஆறு வருடங்களுக்குள் திரேன் பகத் பல மறக்க முடியாத செய்திக் கட்டுரைகளை 'வீக்லி', 'சண்டே', 'இண்டியன் போஸ்ற்', 'லண்டன் அப்சர்வர்' முதலிய பத்திரிகைகளில் எழுதினார். 'என். டி. ராமராவுக்கு முகஸ்துதிதான் பிடிக்கும்' என்று நிரூபிக்க விரும்பிய திரேன் பகத் 'வீக்லி' இதழுக்காக ராமராவைப் பார்க்கப் போனதும் எதிர்பாராதவிதமாக ராமராவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார். "என்னை யாரும் எழுப்பி விடுகிற மாதிரி காணோம்... பிறகு நானாக எழுந்து பார்த்தால், ராமராவ் முகமெல்லாம் புன்னகை ...!" என்றார் திரேன் பகத். அடுத்த ஒரு மணி நேரப் பேட்டியில் திரேனிடம், தலைவா கோமேனி என்றெல்லாம் வர்ணித்துக்கொண்டு வசமாக மாட்டினார் ராமராவ்.

திரேனின் முக்கிய செய்திகளில் ஒன்று, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இந்திய அரச ஐம்பது லட்ச ரூபாய் கொடுத்து, ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்துக்குச் சம்மதிக்கச் சொன்னதாக இந்திய தூதர் தீட்சித் பேட்டியில் தெரிவித்ததாகும்.

இதுபோன்று திரேன் அம்பலப்படுத்திய இன்னொரு செய்திதான். அவருடைய திடீர் சாவுக்குக் காரணமாகிவிட்டது என்றார் மான.

1987 நவம்பர் 19-ம் தேதி... இந்திரா காந்தியின் பிறந்ததினம். டெல்லி விமான நிலையத்துக்கு, வழக்கமாக ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து வந்துபோகும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் வந்து சேர்ந்தது. பயணிகள் வெளியேறினார்கள். சரக்குகளை இறக்கிவைக்கும் ஊழியர்கள் ஒவ்வொரு சரக்குப் பெட்டியாக இறக்கிக்கொண்டிருந்தபோது, ஒரு பெட்டியிலிருந்து குண்டுகள் சிதறி ஓடின,

விமான நிலையமே பரபரப்பில் ஆழ்ந்தது. நிலைய பொலீஸ் டெப்புடி கமிஷனர் ஆர். கே. நியோகி என்பவர் வந்தார். இருபத்திரண்டு கிரேட்டுகளும் கவனமாகச் சோதனையிடப்பட்டன. அவற்றில் பல்வேறுவிதமான ஆயுதங்கள். ராகெட் ஏவுகணைகள் இருந்தன. சரக்குப் பெட்டிகளின் மீது அனுப்புபவர் முகவரியாக ஆப்கானிஸ்தான் நாட்டு கம்யூனிகேஷன்ஸ் டைரக்டர் ஜெனரல் பெயர் இருந்தது. பெறுபவர் பெயர்? டைரக்டர் ஜெனரல் ஆஃப் கம்யூனிகேஷன்ஸ், சன்சார் பவன், புது டெல்லி! (இந்திய அரசில் டைரக்டர் பதவிதான் உண்டே தவிர, டைரக்டர் ஜெனரல் என்ற பதவியே கிடையாது!)

ஏதோ ஒரு தீவிரவாதக்குழு பொய் முகவரிகளைப் பயன்படுத்தி ஆயுதங்களை வரவழைத்திருக்கக்கூடும் என்று பொலீஸ் அதிகாரிகள் கருதினார்கள். ஆயுதங்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டது, அப்போது திடீரென ஓர் உயரதிகாரி அங்கு விரைந்து வந்தார். தான்மத்திய அரசின் உளவுப் பிரிவான 'ரோ' (ரிச்சர்ச் அண்ட் அனலிசிஸ் விங்) அமைப்பைச் சேர்ந்தவர் என்று அடையாள அட்டையைக் காட்டினார். வந்திருக்கும் சரக்கு தங்களுடையது என்று கூறி அவற்றை அவர் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு 1988 மார்ச் மாதத்தில் பத்திரிகைகளில் ஒருசெய்தி வெளியாயிற்று. பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய ஆலயம் ஒன்றில் மத்திய ரிசர்வ்பொலீஸ் படை முகாமிட்டிருந்தது, அந்த ஆலயத்தின் மீது ராக்கெட் ஏவுகணைகள் வீசப்பட்டன, ஆலய மதில்சுவர் நொறுங்கியது. சுவருக்கு மறுபக்கம் படுத்திருந்த பொலீஸாருக்குக் காயம் ஏதும் ஏற்படவில்லை. தொடர்ந்து பஞ்சாப்பில் ஆங்காங்கே ராக்கெட் ஏவுகணைகளைத் தீவிரவாதிகள் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதாகவும், சில இடங்களில் அவை சிக்கியதாகவும் செய்திகள் வந்தன

இந்தச் செய்திகள் வெளியான மறுநாள் பாராளுமன்றத்தில் ராஜீவ் அரசு,59- வது அரசியல்சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது இதன்படி, பஞ்சாப்பில் அவசரநிலை பிரகடனம் செய்யவும், பஞ்சாப் தொடர்பாக எந்தப் பகுதியிலும் அவசர நிலைக்கு உத்தரவிடவும், அடிப்படை உரிமைகளை ரத்துச் செய்யவும் வழிவகுக்கப்பட்டது இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசிய காங்கிரஸ் எம். பி.க்கள் பலரும் பஞ்சாப்பில் தீவிரவாதிகள் ராக்கெட் ஏவுகணைகளைப் பயன்படுத்துவதையே சுட்டிக்காட்டினார்கள்.

நவம்பர் 19-ம் தேதி நிகழ்ச்சியை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தியவர் திரேன் பகத். 1988 ஏப்ரல் 24-ம் தேதி லண்டன் அப்சர்வரிலும் இன்டியன் போஸ்ட்டிலும் அவருடைய ரிப்போர்ட் வெளியாயிற்று. மே 5-ம்தேதியன்று பாராளு மன்றத்தில் இது பற்றிச் சில உறுப்பினர்கள்கேள்விகேட்டார்கள். அப்போது 'ரோ' அமைப்பை நிர்வகிக்கும் உள்துறை இணை அமைச்சரான ப. சிதம்பரம். 'ரோ' சரக்குகளை வரவழைத்தது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார் ஆனால். அவை பஞ்சாப் தீவிரவாதிகளுக்குச் சென்றதாகக் கூறுவதை அவர் மறுத்தார்.

ஏழு மாதங்களுக்குப் பிறகு 1988 நவம்பர் 24-ம் தேதி அதிகாலையில் திரேன் பகத் டெல்லி விமானநிலையத்துக்குச் செல்லும்போது கார் விபத்தில் இறந்துபோனார். அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்றுதான்.

பஞ்சாப்பில் 'ரோ' செய்து வந்த பல திலுமுலலு விவகாரங்களைப் பற்றி திரேன் பகத் மேலும் தகவல் சேகரித்து வைத்திருந்தார். அவை வெளியாகாமல் தடுக்கவே, அவர் ஒரு ஜோடனையான சாலை விபத்தில் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று அகாலிதளத் தலைவர் மான் கருதுகிறார்.

அரசாங்கத்தில் உளவுப் பிரிவு என்பது சாணக்கியன் காலத்திலிருந்தே உண்டென்றாலும் இப்போதைய நவீன கால அரசாங்கத்தின் உளவுப் பிரிவு இந்தியாவில் உருவாகி நூற்றியொரு வருடங்களாகின்றன. ஒரு நூற்றாண்டாகியும் கூட உளவுப் பிரிவுகள் செயல்படும்விதம்பற்றி, அவற்றின் அத்துமீறல்களைப் பற்றி ஜனநாயக நாட்டில் ஆய்வு செய்ய வழிகள் இல்லை. அசோகா ரெய்னாஎழுதிய ஒரு நூல், குல்தீப்நய்யார், நிர்மல் மித்ரா, ரீட்டு சாரின் முதலிய பத்திரிகையாளர்கள் அவ்வப்போது வெளிப்படுத்திய செய்திகள்... இவை மட்டுமே இந்திய உளவுப் பிரிவுகளைப் பற்றிப் பகிரங்கமாக விவரித்துள்ளன.

கடந்த ஐந்து வருடங்களாகப் பஞ்சாப். இலங்கைப் பிரச்சினைகளின்விளைவாக, 'ரோ' ஐ.பி. இன்டெலிஜன்ஸ் பீரோ) போன்றவற்றின் நடவடிக்கைகள் பற்றிக் கொஞ்சம் அதிகமாகச் செய்திகள் வரத் தொடங்கியுள்ளன. மற்றப்படி உளவுப் பிரிவினர் என்ன தவறு செய்தாலும் பொதுமக்களுக்குத் தெரியவோ, தட்டிக்கேட்கவோ வாய்ப்பில்லாத நிலைதான் உள்ளது.

'ரோ' அமைப்புக்குவயது 21 தான். ஆனால் இந்த இருபத்தொரு ஆண்டுகளில் அரசியல் தலைவர்களின் விருப்புவெறுப்புக்கு ஏற்ப உளவுப் பிரிவுகள் செயலாற்றும் போக்கு வந்ததால், பல ரகசிய நடவடிக்கைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

1968-ல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது தான் 'ரோ' தொடங்கப்பட்டது அதற்குமுன் ஐ.பி.மட்டுமே உண்டு பிரிட்டனின் இரண்டு உளவுப் பிரிவுகளான எம்-15, சீக்ரட் இன்டெலிஜன்ஸ் சர்வீஸ். ஆகியவற்றுடன் நெருக்கமான உறவு ஐ.பி.-க்கு இருந்தது.

நேருஜி காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உளவு வேலைகள் முழுக்கவுமே ஐ. பி.

(5 ஆம் பக்கம் பகர்க்க)

## ஒட்டுக் கேட்பது எப்படி...?

டெலிபோனை ஒட்டுக் கேட்பதிலும், தபால்களைப் பிரிப்பதிலும் நீண்டகால அனுபவம் இந்திய உளவுப் பிரிவுக்கு உண்டு. ஒரு தொலைபேசியை ஒட்டுக்கேட்க இன்று உளவுத்துறைக்கு முப்பது நொடிகள் போதும். டெல்லியில் வசந்த விஹார், காகாநகர், ஆனந்நிகேதன் போன்ற பகுதிகளில் தொலைபேசி ஒட்டுக் கேட்பு இயந்திரங்களுடன் கூடிய நவீன அலுவலகங்களை உளவுப்பிரிவினர் நடத்துகின்றனர். இந்த முகவரிகள் எந்த டைரக்டரியிலும் இருக்காது. தொலைபேசியை ஒட்டுக் கேட்கப் பயன்படுத்தும் பல வழிகளில் இதோ ஒன்று...முதலில் உங்கள் தொலைபேசியைப் பழுதாக ஆக்கும்படி தொலைபேசி நிர்வாகத்திடம் உளவு அமைப்பு தெரிவித்துவிடும் நீங்கள் புகார் செய்ததும், உளவு அமைப்பின் டெக்னீஷியன் தொலைபேசி ஊழியர் போல வருவார். உங்கள் தொலைபேசியின் உட்பகுதியில் ஒரு சிறிய காதுத்தோடு போன்ற மைக்கைப் பொருத்தி விடுவார். அதில் ஒரு சென்டிமீட்டர் நீளமே உள்ள ஏரியலும் உண்டு. நீங்கள் தொலைபேசியில் பேசுவது மட்டுமல்ல, அந்த அறையில் பேசுவது எல்லாவற்றையும் வெகு தொலைவிலுள்ள உளவு அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு கேட்கலாம். அரசியல் கட்சிகள், இதர சமூக அமைப்புகளின் ரகசிய செயற்குழுக் கூட்டங்களைக்கூடப் பதிவுசெய்ய ஐ.பி.யிடம் வசதி உண்டு. கூட்டம் நடக்கும் அறையில் சோபாவிலோ, டீபாயிலோ சிறுதட்டு போன்ற ஒரு மைக்கைப் பொருத்திவிட்டால் போதும்...ஒரு கிலோமீட்டர் தொலைவில் வண்டிக்குள்ளே உட்கார்ந்து கொண்டு, அறையில் நடக்கும் அத்தனை பேச்சையும் பதிவுசெய்து கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைசாராக் கல்விப் பயிற்சிகளுக்குத் தெரிவாகாத மாணவர்க்கு;

# தேசிய தொழிற் பயிற்சி சபையின் உதவியுடன் தொழிற்பயிற்சி வழங்க விசேட திட்டம்

இவ்வாண்டு முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற விண்ணப்பித்து, தெரிவு செய்யப்படாது விடப்படும் மாணவர்களுக்குத் தேசிய தொழிற் பயிற்சி சபையின் உதவியுடன் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக யாழ். கிளிநொச்சி மாவட்ட முறைசாராக்கல்விப் பிரிவுப்பொறுப்பதிகாரியான தொழில் நுட்பக் கல்வி அதிகாரி ச.சுப்பிரமணியமும், தேசிய தொழிற் பயிற்சி சபையின் யாழ். பிரதேசப் பொறுப்பதிகாரி எஸ். பாலசுப்பிரமணியமும் பேச்சு வார்த்தைகளை நடாத்தியுள்ளனர். முதற்கட்டப் பேச்சு வெற்றியளித்ததை அடுத்து கொழும்புத் தலைமை அலுவலகத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் பத்தாயிரம்பேர் முறைசாராக் கல்விப்பிரிவுகளில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். முறைசாராப் பிரிவில் உள்ள 32 பயிற்சித்துறைகளுக்கும் மொத்தம் மூவாயிரம் மாணவர்கள் மட்டுமே தெரிந்தெடுக்கப்படுவர்; எஞ்சிய ஏழாயிரம் பேரில் கணிசமானோர். இப்புதிய திட்டத்தின்கீழ் தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் பயிற்சித் திட்டத்தில் சேர்க்கப்படுவர்.

இதற்கென விண்ணப்பதாரிகள் தனியான விண்ணப்பங்களை அனுப்பவேண்டியதில்லை தேசிய தொழிற்பயிற்சி சபை இதற்கென என்னென்ன பயிற்சி நெறிகளை, எங்கெங்கு ஆரம்பிப்பதென்ற முடிவுகள் அடுத்த சில வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

# தலைநகர் மாணவர்க்கு தலைமைத்துவ மோகம்

கொழும்பில் பிரபல பாடசாலை கிரிக்கெட் குழுக்களுக்கிடையிலான 'பிக்மச்' ஆரம்பமாகி விட்டால் வீதிகள் தோறும் தமது பாடசாலைக் கொடிகளுடன் கோஷமெழுப்பியவாறு வாகனங்களில் பவனி வரும் மாணவர்களை எங்கும் காணலாம். இம் முறையும் இந்த வீதிப் பவனிகள் தாராளமாக நடந்தன. ஆனால் உயர் வகுப்பு மாணவர்கள் இந்த வீதிப் பவனிகளில் அதிகமாகப் பங்கெடுக்கவில்லை. இதற்கான காரணம் வீதிப் பவனிகளில் பங்கெடுக்கும் மாணவர்கள் யார்? வரம்பு மீறிய செயல்கள் இடம் பெற்றனவா? என இரகசியமாகக் கண்காணிக்க பிரபலபாடசாலைகள் சிலகுழுக்களை அமைத்துள்ளனவாம். வீதிப் பவனிகளில் கலத்து கொள்ளும் மாணவர்கள் மாணவர் தலைவர் பதவிகள், பாடசாலை மன்றங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்போது உடனடியாகவே பாடசாலை நிர்வாகம் அதை நிராகரித்து விடுகின்றன. இதனால் பதவிகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் இந்த 'பிக் மச்' பவனிகளைக் கண்டால் தூர விலகியோடுகிறார்கள்.

# மன்னார் வைத்தியசாலைக்கு புதிய ஜெனரேட்டர் அன்பளிப்பு

மன்னார் பள்ளமடுக் கிராமிய வைத்தியசாலைக்கு மின்னொளி கிடைத்துள்ளது. புதிய ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது, தினமும் மாலை 6 மணியில் இருந்து 9 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படுகிறது, இப் புதிய ஜெனரேட்டரை வாங்குவதற்கு விடத்தல்தீவுக் கத்தோலிக்க மக்களும், மற்றும் கிராமிய மக்களும் நிதி உதவி அளித்துள்ளனர். திரு யக்கோ சலமோன் என்பவர் இருபதினாயிரம் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

அண்மையில் நடைபெற்ற மின்னொளி வழங்கும் வைபவத்தில் மன்னார் அரச அதிபர் திரு. எஸ். செபநாயகம் அவர்கள் கலந்து கொண்டார். வைத்தியசாலை அதிகாரி டாக்டர் திரு. சந்தவனம் அரியசிங்கம் அவர்கள் மின்னொளி வழங்குவதை ஆரம்பித்து வைத்தார். (17)

## சுவையான செய்திகள்

# இரவில் வந்த உறவுத்திருடன்

கர்நாடகம், தென்னிந்திய மாநிலங்களில் ஒன்றாகும். அங்குள்ள கிராமம் ஒன்றிலே நடந்தது இது. நேரம் நடு இரவு வீடொன்றின் கதவு ''பட பட'' வெனத் தட்டப்படுகின்றது. வீட்டுக்காரருக்குக் குலை நடுக்கம். காரணம், இரவுநேர முகமூடிக் கொள்ளைக்காரர்களின் ஆதிக்க அட்டகாசம். பயத்தின் உச்சத்திற் கதவைத் திறந்தார் வீட்டுக்காரர். வெளியே பார்த்தால் எதிர் பார்த்தபடியே முகமூடிக் கொள்ளைக்காரர்கள் வீட்டிலிருந்தவை எல்லாவற்றையும் வாரிச்சுருட்டிக் கொண்டு கிளம்பும் போது, அங்கிருந்த சுவரில் மாட்டப்பட்டிருந்த பழமை வாய்ந்த ஒரு பாரம்பரியப் பட்டாக்கத்தியையும் கொள்ளையர் தலைவன் எடுத்துப்போக முற்பட்ட போதுதான், வீட்டுக்காரத் தலைவருக்கு மிகுந்த தைரியம் வந்தது. உடனே அத்தலைவனின் முகத்திரையை இழுத்தகற்றிவிட அட! அது அவரது சொந்த மகனே! மூன்று வருடங்களுக்கு முன்பு வீட்டை விட்டுத் தந்தையாற் துரத்தியடிக்கப்பட்ட அவன், தந்தையைப் பழிக்குப் பழி வாங்கவே முகமூடிக் கொள்ளையர்களின் தலைவனாக வந்தானாம்! இதிலிருந்து என்ன தெரிகிறது? தந்தை மகனுக்காற்றும் உதவியா? அன்றேல், மகன் தந்தைக்காற்றும் உதவியா?

# மது இதனையும் செய்யுமா?

மது அருந்துவதாற் பாலுணர்வு அதிகரிப்பதாகச் சொல்லுகிறார்கள். இதில் உண்மை இல்லை என வாதிடப்படுகிறது. ஆங்கிலப் பெருங் கவிஞர் ஷேக்ஸ்பியர் என்ன சொல்லுகிறார் தெரியுமா? மது, ஆசையை அதிமாகத் தூண்டுகின்றது. ஆனால் செயற் திறமையைக் குறைத்துவிடுகின்றது எனகிறார், தொடர்ந்து குடிப்பவர்களுக்கு நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு, செயற்திறன் அற்றுவிடுகிறதுஎன்பதை டாக்டர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது சரி ''கவிக் கலாநிதி'' எப்படி ''மதுக் கலாநிதி'' ஆனார்?

# யாழ். கல்லூரியில் விசேட கருத்தரங்கு

''இருபத்தியோராம் நூற்றுண்டில் கல்வித் தேவை'' என்னும் பொருள் பற்றிய சிறப்புக் கருத்தரங்கு ஒன்று, இம்மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை, யாழ்ப்பாணக் கல்லூரி ''ஒட்லி'' மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா உட்படப் பிரபல கல்விமான்களும், கலா அறிஞர்களும் இச்சிறப்பு கருத்தரகிற் கருத்துரைகள் வழங்க விருக்கின்றார்கள். யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் மேற்படி கருத்தரங்கை சிறப்பாக நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

# அகில இலங்கைதமிழ்த்தினவிழா மே 8-ல் கொழும்பில் நடக்கும்

அகில இலங்கைத் தமிழ்த் தினவிழா இவ்வாண்டு மே மாதம் எட்டாம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இத் தமிழ்த் தினவிழாவையொட்டிப் பாடசாலை, கொத்தணி, கோட்டம், மாவட்டம், மாகாணம் ஆகிய மட்டங்களில் போட்டிகள் நடாத்தப்படும்.

இதனையொட்டித் தற்போது ஒவ்வொரு கல்விப் பிராந்தியத்திலும் தமிழ்த் தின விழாக்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாகாண ரீதியில் வெற்றி பெற்று வருபவர்களுக்கிடையேயான அகில இலங்கை மட்டப் போட்டிகள் கொழும்பில் கோலாகலமாக இம்முறை நடாத்தப்படவுள்ளது.

வாசிப்பு, எழுத்து, ஆக்கம், பா ஓதுதல், நடனம், இசை, பேச்சு, நாடகம், விவாதம், சொல்வதெழுதல் போன்ற பல்வேறு துறைகள் உள்ளடக்கியதாக இப்போட்டிகள் நடைபெறும்.

இப் போட்டிகளில் சிறுவகுப்பு மாணவர்கள் முதல் உயர் வகுப்பு மாணவர்களும் கலந்து கொள்ளும் பொருட்டு நான்கு மட்டத்தில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விழாவிற்கான ஏற்பாடுகளைக் கல்வியமைச்சும், இந்து சமயக் கலாசாரத் தமிழ் அலுவல்கள் அமைச்சும் மேற்கொண்டு வருகின்றன. (6)

# ப.நோ.கூ. சங்க தலைவர்ராஜினாமா

செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் விஜயராஜா தனதுபதவியினைராஜினாமா செய்துள்ளார் கடந்த ஆறு வருடகாலமாக இவர் மேற்படி தலைவர் பதவியினை வகித்துவந்தர் இவரது ராஜினாமாவை அடுத்து வவுனியா [illegible] இயக்குநர் சபை ஒன்றினை நியமனம் செய்துள்ளார். (11)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# புத்தளம் பகுதி மாணவரின் அவலம் தீருமா?

ஆசிரியர்,
முரசொலி

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் சைவமாணவர்கள் தமது பாடமாகிய சைவசமயத்தைக் கற்க முடியாதுள்ளனர். இதனால் வேற்று சமயத்தைப் படித்தே பரீட்சைக்கு எழுதவேண்டியுள்ளனர். சைவசமயப் புத்தகம் போதியளவு இல்லாமையும், சைவ ஆசிரியர்கள் இல்லாமையுமே இதற்குக் காரணங்கள் ஆகும். இதனை நிவர்த்திக்கச்சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

புத்தளம் ரி தனகோபால்

# நாங்கள் எப்போதும் இலவுகாத்த கிளிகளா?

ஆசிரியர்
முரசொலி

மீளக் குடியமர்தல் நிவாரணம் முதலாம் கட்டமாக ரூபா 1000 வீதம் ஏற்கனவே பலருக்கு / வழங்கப்பட்டு அவர்களுக்கு 2-ம் கட்டமாகவும் மிகுதி ரூபா 1000 தற்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் எவ்வித நிவாரணமும் பெறாத என்னைப்போன்ற பலர் இலவு காத்தகிளிகளாக இருக்கின்றோம். எமக்கு இதுவரை முதலாம் கட்ட நிவாரணமே கிடைக்கவில்லை. மேற்படி நிவாரணம் எமக்கு கிடைக்குமா கிடைக்காதா என்பதை யாழ். அரச அதிபர் அறியத்தருவாரா?

யாழ்ப்பாணம் ச, மார்கண்டு

# சேவன சரண திட்டத்தின்கீழ் மட்டு மாவட்டத்தில்485வீடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் செவன,சரண திட்டத்தின் கீழ் 485 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு கே பத்மநாதன்தெரிவித்தார்.

மேற்படி 485 வீடுகளையும் அமைப்பதற்கு 21 லட்சம் ரூபா செவன நிதி மூலம் செலவு செய்யப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (65)

# புலிகளுக்கு இங்கும் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு விற்பனையை தமிழீழ விடுதலைப்புலிகள் உரும்பராய் பகுதியிலும் முற்றாகத் தடை செய்துள்ளனர்.

இவ்விற்பனையும், தயாரிப்பும் நிறுத்தப்படுவதற்கு முன்னெச்சரிக்கை விடுத்த அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் இரவு நேரத்தில் திடீர் சோதனை நடத்தினர்.

கசிப்பு ஏற்படுத்திய அனர்த்தங்களிலிருந்து மக்களை காப்பாற்ற முனைந்துள்ள புலிகளுக்கு இப்பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

# சகல ஊழியர்களுக்கும் இனி விபத்து நஷ்டஈடு

அரசாங்க தனியார் துறை என்ற பாகுபாடின்றி அமைச்சுக்களையும், திணைக்களங்களையும்தவிர்ந்தசகலநிறுவனங்களிலும்கடமையாற்றும்ஊழியர்களுக்குச் சேவையின்போது ஏற்படும் விபத்துக்களுக்காக இனி நஷ்டஈடு வழங்கப்படும். இதற்கான சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னர் 23 ஆயிரம் ரூபாவாக இருந்த நஷ்டஈட்டு உச்சவரம்பு தற்பொழுது இரண்டரை லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

50 வருடங்களுக்கு முன்னர் அன்றைய நிலைமைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டமொன்றே இதுவரை அமுலில் இருந்தது.

பழைய சட்டத்தின்படி 500 ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெறுவோர் மட்டுமே நஷ்டஈடு பெறவிண்ணப்பிக்கலாம்.

புதிய சட்டத் திருத்தத்தின்படி அந்தச் சம்பள உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலிகிதர்கள் உட்பட அனைத்துத்துறைகளிலும் சகல தரங்களிலுமுள்ளோர் இந்த நஷ்டஈட்டைப் பெற முடியும்.

இதுதவிர ஒரு தொழிலாளர் கடமையில் சேர்ந்து மூன்று நாட்கள் கழித்து இருந்தால் விபத்திற்காக அவர் நஷ்டஈடு கோரமுடியும் தற்காலிக சமயாசமய நிரந்தர என்ற வேறுபாடு இனிமேல் கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## உதைப்பந்தாட்டம் 'ட்ரோ' வில்

லங்கா சிமெந்து நிறுவனத்தின் விளையாட்டுக்கழகத்திற்கும். யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே அண்மையில் நடந்த சிநேகபூர்வ உதைப்பந்தாட்ட போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது லங்கா சிமெந்து நிறுவன சார்பில் விளையாடிய சுந்தரலிங்கம், கலையழகன் ஆகியோரும் முஸ்லிம் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் விளையாடிய முஞஸ்ஸமுரம் மிகத் திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர். இப்போட்டிக்கு வேதாபரணம் மத்தியஸ்தம் வகித்தார்.

## கோவளம் வெற்றி

கோவளம் இளைஞர் மன்றத்திற்கும்காரை விளையாட்டு கழகத்திற்குமிடையில் நடைபெற்ற 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கோவளம் இளைஞர் மன்றம் 136 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

வாரிவளவு நல்லியக்க சபையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இவ்வணிகள் பங்குபற்றின முதலில் துடுப்பெடுத்தாடிய கோவளம் இளைஞர் மன்றம் 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. சிவகணேசன் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 72 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து ஆடிய காரை விளையாட்டுப் கழகம் 7. 3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது.

## உள்நாட்டிலும வெளி...

3-ம் பக்கத்தொடர்ச்சி

யால் மேற்கொள்ளப்பட்டன. 1962-ல் சீனவுடன் நடந்த போருக்குப் பிறகுதான் தனித்தனி அமைப்புகளைக் ஏற்படுத்த முடிவாயிற்று.

சீனவை உளவு பார்க்க ஐ.பி.,அமெரிக்காவின்சி ஐ ஏ. உதவியை நாடியது இந்தியாவுக்கு எதிராக சி.ஐ ஏ. செயல்படுவதாக நேருவின் கட்சியில் சிலர் சத்தம்போட்டுக் கொண்டிருந்த அதே வேளையில்தான், சி. ஐ. ஏ வுடன் கூட்டு நடவடிக்கையில் ஐ. பி. ஈடுபட்டுக் கொண்டிருந்தது சீனப் போரின் போது சரியான முன்னெச்சரிக்கை தரத் தவறியதாக இயக்குநர் மல்லிக் பழிக்குள்ளானர்.

அவரையடுத்துப்பொறுப்புக்குத் வந்த ராம் நாத்காவ் தான் இப்போதுள்ள'ரோ' அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர். அதுவரை பிரிட்டிஷ் பாணியைப் பின்பற்றி வந்த உளவுத்துறை, பிறகு அமெரிக்கப் பாணியை மேற்கொண்டது. 'ரோ' உருவானதிலிருந்தே ஐ.பி.க்கும்'ரோ'வுக்கும் இடையே கடுமையான விரோதம் ஏற்பட்டுவிட்டது.ஐ. பி. யில் ஐ. பி. எஸ். தேர்வு எழுதி வந்த பொலிஸ் அதிகாரிகளே பணியாற்றினர்கள். ஆனல், காவ் இதை விரும்பவில்லை.

'ரோ' வுக்கு நேரடி நியமனம் செய்ய ஆரம்பித்தார். ஐ. பி- யைவிடக் கூடுதலான சம்பளம், வசதிகள் 'ரோ' அதிகாரிகளுக்குத் தரப்பட்டன. 1971-ல் காவ் பாதுகாப்புப் பிரிவின் சிறப்புச் செயலாளரானதும், புதிய உளவுப்பிரிவான ஏவியேஷன் ரிசர்ச் சென்டர் (ஏ. ஆர் சி) என்ற அமைப்பைத் தொடங்கினர். சீன, பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளிலுள்ள அவர்களின் தளங்களை விண்ணிலிருந்து துல்லியமாகப் படமெடுப்பதற்கான கருவிகள் இந்த மையத்துக்கு வரவழைக்கப்பட்டன. காவின் தலைமையில் 'ரோ' வளர்ந்தது. ஐ. பி-க்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட அதேவேளையில், 'ரோ' வுக்கு முப்பது கோடி ரூபாய் தரப்பட்டது.

'ரோ' ஐ பி விரோதம் எந்த அளவுக்குப் போய்விட்டதென்றல், இரண்டு அமைப்பினரும் ஒருவரை மற்றவர் உளவு பார்க்கிற நிலையே ஏற்பட்டது. சென்னையிலிருந்த 'ரோ' அதிகாரி உன்னிகிருஷ்ணன், சி.ஐ ஏ ஏஜெண்டாகச் செயற்பட்டதாகக் கைது செய்யப்பட்டது நினைவிருக்கலாம். உன்னி பற்றி மேலிடத்துக்குத் தகவல் கொடுத்தது ஐ பி. அதிகாரிகள்தான். மேலிடத்துக்கு மட்டுமல்ல, பத்திரிகையாளர்களுக்கு ஐ. பி-யும், 'ரோ' வும் மாறி மாறி ஒருவரைப்பற்றி மற்றவர் தகவல் தருவது இப்போது சாதாரணவிஷயமாகிவிட்டது 'ரோ' உருவான பிறகு உள்நாட்டு உளவுப்பணிக்கு ஐ பி. பொறுப்பென்றும், வெளிநாட்டு உளவுக்கு 'ரோ' பொறுப்பென்றும், பிரிக்கப்பட்டது. ஆனல், நடைமுறையில் உள்நாட்டு அரசியலில் உளவு வேலைகளைச் செய்ய இந்திரா 'ரோ'வைப் பெரிதும் நம்பினர் இதற்குக் காரணம், 1971-ல் இந்திராவுக்கு மிகப்பெரிய அரசியற் செல்வாக்கு ஏற்பட 'ரோ' செய்த உதவிதான்! வங்கதேச விடுதலைப் போரின்போது 'ரோ' ஏஜெண்டுகள் 'முக்திவாகினி' என்ற பெயரில் கிழக்குப் பாகிஸ்தானில் நுழைந்து, பாலங்களைத் தகர்த்து பாகிஸ்தான் அரசைப் பயப்படவைத்தார்கள். அவர்கள் சென்று உளவுத்தகவல்கள் திரட்டி வந்தபிறகுதான் ராணுவம் நேரடிப்போருக்குச் சென்று வெற்றி ஈட்டியது. வங்கதேச விடுதலை உலக அரங்கில் இந்திராவை வலிமையான தலைவராக ஆக்கியது.

ஐ.பி-யை 'சின்ன' வேலைகளுக்கு மட்டுமே இந்திரா பயன்படுத்தினர். தன் கட்சிக்காரர்களையே வேவு பார்ப்பதும், எதிர்க்கட்சிகள் பற்றி உளவு சொல்வதும் தான் சின்ன வேலைகள், நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய வேண்டாம். என்று ஐ பி. இயக்குனர் கூறிய யோசனையை இந்திரா ஏற்கவில்லை. 'ரோ' எமர்ஜென்ஸி அறிவிப்பதை ஆதரித்தது.

பின்னல் ஐ.பி. சொன்னதைத் தட்டாமல் கேட்ட போது இந்திரா பாதிக்கப்பட்டார்! அவசர நிலையை ரத்து செய்துவிட்டு தேர்தல் நடத்தினல் அவர் ஜெயிப்பார் என்று ஐ பி.கூறியது. அதன்படி செய்து அவர் தோற்றார்! நாங்கள் என்ன செய்வது? நாங்கள் கூறுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது முதல் அவருக்குப் பிடித்ததை நாங்கள் கூற ஆரம்பித்து விட்டோம் என்று ஐ பி அதிகாரிகள் சமாதானம் கூறியிருக்கிறார்கள்!

இந்திரா 1977-ல் தோல்வியடைந்து ஆட்சியை இழந்த பிறகு'ரோ'அமைப்பின் செல்வாக்கும்சரிந்தது. ஜனதா அரசு 'ரோ' ஐ. பி முதலியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தது.

'ரோ' தெரிவித்த பல யோசனைகளை அப்போதைய பிரதமர் மொரார் ஜிதேசாய் நிராகரித்துவிட்டார், கஹுட்டா என்ற இடத்தில் பாகிஸ்தான் ரகசியமாகக் கட்டி வந்த அணுமின் சார உலையின் வரைபடம் உட்பட முழு விவரங்களையும் தருவதற்கு பாகிஸ்தானில் ஆள் இருப்பதாக 'ரோ' தெரிவித்தது. அதற்காக ஒருலட்சத்துப்பதின் மூன்றுஆயிரம்ரூபாய் சன்மானம தரவேண்டும்என்று கூறப்பட்டது. கஹுட்டா உலை பற்றிய முழு விவரம் கிடைத்தால், இஸ்ரேல் அங்கு போய் குண்டு வீசத் தயாராக இருந்தது. ஆனல் மொரார்ஜி தேசாய் மொத்தமாக இதை நிராகரித்தார்.

வங்கதேசத்தில் ஒரு அரசியல் கொலையை நடத்தவும் 'ரோ' திட்டம் வகுத்தது வங்கதேசம் உருவாகக் காரணமாயிருந்த முஜிபுர் ரகிமான் கொலை செய்யப்படுவார் என்பதை'ரோ' எதிர்பார்க்கவில்லை. அந்தக் கொலைக்குப் பழிவாங்க புதிய அதிபர் ஜியாவுர்-ரகுமானைக் கொலை செய்யலாமென்று 'ரோ' கருதியது. இந்திரா பிரதமராக இருந்த போது தயாரான இந்தத் திட்டம் நிறைவேறும் முன்பே ஆட்சி மாறி ஜனதா அரசு ஏற்பட்டுவிட்டது. மொரார்ஜி இந்தக் கொலைகாரத்திட்டத்துக்கு அனுத்தி தரமறுத்துவிட்டார்.

பிறகு ஜனதா அரசு கவிழ்ந்து, மீண்டும் இந்திரா பிரதமரான பிறகு வங்கதேசத்தில் ஜியா-வுர்-ரகுமான் கொலை செய்யப்பட்டார் இதில் தனக்கு எந்தப் பங்கும் கிடையாது என்று இந்திரா மறுத்தார். அநேகமாக இந்திராவே திட்டத்தைக் கை விட்டிருந்தாலும் 'ரோ' அதிகாரிகள் தாமாகவே அதைச்செய்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

1980.ல் இந்திரா பிரதமரான பிறகு பழையபடி "ரோ" வுக்கும். ஐ.பி.க்கும் நிதி ஒதுக்கீடு அதிகமாயிற்று ஆர். என் காவ் திரும்ப அழைக்கப்பட்டு பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். (இந்திரா கொலையான 24 மணிநேரத்தில் அவர் பதவியிலிருந்து விலகிவிட்டார்).

உளவாளிகளின் வேலை, பதவி வரிசை பற்றிய நிர்வாக ஆய்வு ஒன்றை நடத்த சங்கரன் நாயர் அழைக்கப்பட்டார்.

(நாளை தொடரும்...)

## உங்களுடையதா?

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உடையார் கட்டு லங்கா ஆயுர்வேத வைத்திய நிலயத்திற்கு முன்னல் திருமதி. பி. திருச்செல்வம் என்பவரினல் நகையுடன் கூடிய'பேர்ஸ்ஒன்று கண்டெடுக்கப்பட்டு இலங்கை வங்கி யாழ். மாவட்ட அலுவகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அவ் அலுவலகத்தில் கடமை புரியும் எஸ், திருச்செல்வத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

---

தமிழக அரசு மீதான

# இ. கா. உறுப்பினர் புகாரால் மக்களவையில் குழப்பம்

(புதுடில்லி)

தமிழ் நாடு அரசுக்கு எதிராக நேற்று மக்களவையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. இரா. அன்பரசு கொடுத்த புகார் தொடர்பாகக் கேள்வி நேரத்தின் போது சுமார் இருபது நிமிடங்கள் குழப்பம் நிலவியது.

முன்னதாக மக்களவைத் தலைவர் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய திரு. அன்பரசுக்கு அனுமதியளித்தார்.

மறைமலைநகர் ரயில் நிலையத்திற்குக் காமராஜரின் பெயரை வைக்க வேண்டுமென அமைதியாகப்போராட்டம் நடத்தியபோது தான் கைது செய்யப்பட்டதாக அவர் கூறினர்.

பின்னர் கட்டுப்போட்டிருந்த தனது இடது கையைக் காட்டுவதற்காகச் சேட்டை கழற்றிக் கொண்டு அவைத் தலைவருக்கு முன்பாக வந்த போது ஒரே கூச்சல்எழுந்தது. அவர் கூறியதும் எதுவும் புரியவில்லை.

இது தொடர்பான முழு விவரமும் தமிழ்நாடு அரசிடம் கோரப்படுமென பிரதமர் திரு. வி. பி. சிங் பின்னர் தெரிவித்தார்.

உள்த்துறைஅமைச்சரிடம்ஏற்கனவே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

---

ஜனதிபதி வெங்கடராமன் சொல்கிறர்

# அயல் நாடுகளுடனன உறவு; பாரதம் முன்னுரிமை அளிக்கும்

(புதுடில்லி)

"தெற்காசியப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்குப் பாரதம் தனது அண்டை நாடுகளுடனன உறவுக்கு முன்னுரிமை அளிக்கிறது" என்று பாரத ஜனதிபதி திரு ஆர் வெங்கட்ராமன் கூறியுள்ளார்.

தற்போது பாரத விஜயம் மேற்கொண்டுள்ள மாலைதீவு ஜனதிபதி அப்துல் கையூமுக்கு அரசு சார்பில் அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னர்.

இதற்கு முன்னதாக இரு நாடுகளும் இரண்டாவது கலாசாரப் பரிவர்த்தனைத் திட்டத்தில் கையொப்பமிட்டன.

இவ்விருந்துபசாரத்தில் திரு. வெங்கட்ராமன் மேலும் பேசுகையில் பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கு தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் சார்க்கை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திக் கூறினர்.

'இந்துமா கடலை இராணுவ நடமாட்டமில்லாத அமைதிப் பிரதேசமாக்க பாரதம் விரும்புகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது இவ்வாறு இருக்க மாலைதீவு வாசிகள் பாரதம் வருவதற்கு இப்போது 'வசா' தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீநகரில் பெண்களுக்குத் தடியடி

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் இந்தியாவுக்கு எதிராக ஊர்வலம் நடத்த முயன்ற சுமார் ஆயிரம் முஸ்லிம் பெண்களைக் கலைக்கப் பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகம் நடாத்தினர்.

ஸ்ரீநகரிலுள்ள பாதுகாவல் அலுவலகத்திற்குள் இவர்கள் புக முயன்றனராம்.

பல பெண்கள் இவ்வேளை காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

## இன்று நாள் எப்படி?

மேடம்: பிதாவழியுதவி, உயர் பதவி, இருதொழில், தேடியவர்கள் வருகை, வாசனசுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: திடீர்ப்பயணம், தூரத்துப்பிரயாணம், வாசனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மிதுனம்: வாக்குக்கலகம், வணிகர்கள் கடற்தொழில் சய்வோர் இலாபம், தூரத்தெதுச்செய்தியால் நன்மை.

கடகம்: விவாக நிச்சயம், இலெட்சுமி கடாச்சம், பணவருவாய், இளையசகோதர வழியுதவி, வணிகர்கள் இயந்திரத்தொழில் மூலம் இலாபம்.

சிங்கம்: சத்துருபயம், வாகன மாற்றம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், தேடியவர் வருகை, புதுத்தொழில்.

கன்னி: சுகஜீவியம், வாக்குப் பலிதம், வணிகர்கள் கடற்தொழில்செய்வோர் இலாபம், வாகனமாற்றம்.

துலாம்: உயர்பதவி, உத்தமர்கள் வருகை, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

விருச்சிகம்: உயர் பதவி மூலம் உபத்திரவம், பெரியோர் பகை, உடல்ரோகம், தேடியவர் வருகை;

தனுசு: சுகஜீவியம், பணவருவாய், வாகன சுகம், வணிகர்கள், கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: விவாக நிட்ஷயம், உயர்பதவி, உத்தமர்கள் உறவு, வாக்குப் பலிதம், வணிகர்கள் இலாபம்.

கும்பம்: வாக்குக்கலகம், பெரியோராசி, தேடியவர் வருகை, பணவரவு, புதுத்தொழில்.

மீனம்: புகழ் தேடிவரும், பணநஷ்டம், தூரத்துப் பிரயாணசுகம், விவாக நிட்சயம், வணிகர்கள் இலாபம்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில்

# அரச ஊழியர் விடுதிகள் பாழடைந்த நிலைகளில்

அண்மைக்கால அசம்பவிதங்களின் காரணத்தால்வடபகுதியில் உள்ள அரச உத்தியோகஸ்தர்களின் விடுதிகள் பாதிப்படைந்துள்ளன.

யாழ் மாவட்டத்தை விட கிளிநொச்சி மாவட்டத்திலே கூடுதலான அளவு அரச உத்தியோகஸ்தர் விடுதிகள் மோசமாகப்பாதிப்படைந்துள்ளன.

இந்திய அமைதிப்படையினர் நிலை கொண்ட இடங்களில் இருந்த அரச விடுதிகளே கூடுதலானவையாகும் இந்திய அமைதிப்படையினர் வெளியேற்றத்தையடுத்து பொதுமக்கள் இவ் அரச விடுதிகளின் ஒடுகள் கதவுகள் போன்றவற்றை தினமும் அபகரித்துச் செல்கின்றனர்,

வைத்தியசாலை அதிகாரிகள் வைத்தியசாலை ஊழியர்கள்விடுகளே கூடுதலாக இதனல் பாதிப்படைந்து வருகின்றன தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகமான வைத்திய அதிகாரிகள் தனிப்பட்ட வீடுகளிலே தங்கிவருவதும்குறிப்பிடத்தக்கது, (03)

## கிளிநொச்சி மாவட்டப்பதிவகம் அலுவலக வேலைகள் துரிதம்

கிளிநொச்சி மாவட்டப் பதிவகம் இம்மாதம் 14-ம் திகதிதிறந்துவைக்கப்பட்டது. இப் பணிமனையில் காணிப் பதிவு வேலைகள் மூன்று பகுதிகளாக நடைபெற்று வருகின்றன, பச்சிலைப்பள்ளி 'பீ'ப் பகுதியாகவும் கரைச்சி 'எம்' பகுதியாகவும், பூநகரி 'ஜீ' பகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவுகளாகப் புலோப்பளை, முள்ளிப்பற்று, கண்டாவளை, பரந்தன், பூநகரி, பல்லவராயன்கட்டு, வட்டக்கச்சி, கிளிநொச்சி ஆகியவை பிரிக்கப்பட்டுள்ளன. விவாகப் பதிவுப் பிரிவுகளாகப் பச்சிலைப் பள்ளி, கரைச்சி, பூநகரி ஆகியவை பிரிக்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி மாவட்ட முஸ்லீம் விவாகப் பதிவுக்காரராக ஜனுப் ஏ. ஆர், முத்து மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார். (17)

## யாழ்தேவி இரவுத்தபால் ரயில் புதிய நேர மாற்றங்கள்

நேற்றைய தினம் தொடக்கம் வடபகுதிக்கான யாழ் தேவி, தபால் ரயில் சேவைகளில் நேரமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்விபரம் வருமாறு.

யாழ்தேவி: காலை 6.30க்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு 6.57க்கு யாழ் புகையிரத நிலையத்தையடைந்து மாலை 3 10க்கு கொழும்பையடைகின்றது.

இதேபோல் கொழும்பில் இருந்து காலை 5.45க்கு புறப்பட்டு 1.30க்கு யாழ்ப்பாணத்தையடைகின்றது,

இரவுத் தபால் ரயில்: மாலை 6.30க்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்பட்டு 7 12க்கு யாழ் புகையிரத நிலையத்தையடைந்து அதிகாலை 5.15க்கு கொழும்பையடைகின்றது.

இதேபோல் கொழும்பில் இருந்து புறப்படும் தபால் ரயில் மாலை 7.15க்கு தனது பயணத்தை ஆரம்பித்து அதிகாலை 4.45க்கு யாழ் புகையிரத நிலையத்தையடைகின்றது. (03)

## மன்னார் நானாட்டான் பகுதிக்கு மேலதிகப் பதிவாளர் தேவை

(மன்னார்)

மன்னார், நானாட்டான் கோட்டத்தில் நானாட்டான் மேற்குப் பகுதிக்குப் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகாரர் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கோட்டத்தில் முருங்கன், வங்காலை ஆகிய இடங்களுக்கு இருபதிவுகாரர்கள் உள்ளனர் வங்காலைப் பதிவுகாரரே நானாட்டான் மேற்குப் பகுதி வேலைகளையும் கவனித்து வருகிறார். சனிக்கிழமை ஒரு நாள் மட்டுமே அவருக்காக ஒதுக்கப்பட்டிருப்பதால் இப்பகுதி மக்கள் பல கஷ்டங்களை அநுபவித்து வருகின்றனர்.

இப்பிரிவில் பன்னிரண்டு கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இப்பகுதியின் சனத்தொகை 6368 ஆகும். எனவே ஒரு பதிவுகாரரை நியமித்தால் இப்பகுதி மக்கள் நன்மை அடைவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

### எயிட்ஸ்...

அனுப்பியுள்ளது. மேலங்கிகள் தடைக்கண்ணாடி,விசேட கருவிகள்,கையுறைகள் பாதணிகள் போன்றவற்றையே பிரிட்டன் கொடுத்துதவியுள்ளது.

மேற்படி எயிட்ஸ் நோயினால் பிடிக்கப்பட்ட கர்ப்பிணிக்கு பிரசவம் பார்க்க அச்சம் காரணமாகவும் சரியான உபகரணமின்மையாலும் வைத்தியர்கள் மறுத்து வந்தனர். இன்னும் சில தினங்களில் இப் பெண் குழந்தையைப் பிரசவிக்க உள்ளதாலேயே வைத்திய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து வைத்தியர்களுக்கான விசேட உபகரணங்களைப்பெற்றுக்கொடுத்துள்ளது.

### மா. சபை...

மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சேகு இஸ்ஸதீன் கூறியுள்ளார்.

வட, கிழக்கு மாகாண சபைக்கு புதிய முதலமைச்சரையும்அமைச்சரவையையும் தெரிவு செய்து மாகாணசபையை இயங்க வைக்குமாறு மாகாண எதிர்க்கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் வட, கிழக்கு மாகாணசபையின் ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்னவை கடிதமூலம் கோரியுள்ளது.

### மாவிட்டபுரம...

வீதிகளின்சகலஇடங்களிலும் புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் ஒலிபெருக்கி மூலம் புலிப்படைப் போராளிகளை வாழ்த்திக் கீதங்களும்ஒலிபரப்பப்பட்டன. (32)

## மட்டு மாவட்ட குடும்பநல திட்டத்திற்கு ஒதுக்கிய அரச நிதி பயன்படாது திரும்பிச் சென்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டக் குடும்ப நல சங்கத்திற்கு அரசாங்கத்தினல் 1989 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட $1\frac{1}{4}$லட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் அந்நிதி திறைசேரிக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டக் குடும்ப நலச் சங்க செயற்குழுவின் அசமந்தப் போக்கினலும் மேற்படி மாவட்ட குடும்பநல சங்க அதிகாரிகள் குடும்பநல திட்டங்கள் எதையும் திறம்படச் செயற்படுத்தாமையுமே இந்நிதி பயன்படுத்தப்படாமற் திறைசேரிக்கு திருப்பியனுப்பக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் குடும்ப நலச் சங்கத்தின் செயற்பாடுகள் மந்த நிலையிலேயே இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (03)

### கைது

நேற்று குமண வனவிலங்கு சரணாலயத்தில் தங்கியிருந்த முப்பத்தியொரு தமிழ்த்தேசிய இராணுவத்தினர் இலங்கை இராணுவத்தினரிடம் அகப்பட்டுள்ளனர். துப்பாக்கிகள், இயந்திர துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள் என்பனவும் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

### புலிகளின் உறுப்பினர் மரணம்

விடுதலைப்புலிகளின் உறுப்பினர் லோரன்ஸ் (மட்டக்களப்பு) நேற்று சுகவீனம் காரணமாக யாழ் வைத்தியசாலையில் மரணமானர்,

### பரிசளிப்பு விழா

யாழ். ரோட்டறிக் கழகத்தினல் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வினவிடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை 2.30 மணிக்கு வை. எம். சி ஏ இல் நடைபெறும்.

### ஒரிஸா...

தெரிவித்துள்ளனர்.

இதே வேளை இவ்வாறு இலங்கையர்கள் அகதிமுகாம்களைவிட்டு தப்பிச் செல்வதை ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் பிஜு பட்னயக் கண்டித்துள்ளார். தமது நல்லெண்ண முயற்சிக்குப் பங்கம் விளைவிப்பதாகவே இச்சம்பவம் அமைந்துள்ளதாக அவர் கூறினர்.

ஒரிஸ்ஸா அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கென அறுபது லட்சம் ரூபாய்களை இந்திய அரசு ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மாகாண...

மாகாணப் பொலிஸ் படை புலிகளின் அரசியற் பிரிவின் அனுசரணையுடன் இயங்கும். மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் பின் இயங்கும். புலிகள் மாகாணசபை நிர்வாகத்தை எடுத்தால் அந்தப் பொலிஸ் பிரிவு விடுதலைப் புலிகளின் கீழ் இயங்கும் என்றும் அவர் கூறினர்.

மாகாணசபைக்கான 13வது திருத்தச்சட்டப்படி மாகாண சபை நிர்வாகத்தின் ஒரு பகுதியாகமாகாணப்பொலிஸ் படை உண்டு. அது இன்னமும் மாகாண சபை உருவாகிஒரு வருடமாகியும் உருவாக்கப்படவில்லை. சமீபத்திலேயே சட்டம் கொண்டு வரப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் கூறினர்.

## புனர்வாழ்வு நடவடிக்கையாக மட்டு. மாவட்டத்தில் வீடமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புமாவட்டத்தில் புனர்வாழ்வு புனர்அமைப்பு ஒன்றிணைப்புதிட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு பணிகள்தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன

மேற்புடி தகவலை தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மட்டக்களப்புமாவட்டமுகாமையாளர் திரு. கே' பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ரூபா 700/- —1500/- வரையிலான வருமானம் உடையோர் அரசமானியமாக 15,000 ரூபாவையும் மேலதிகமாக 15,000 ரூபா கடனுதவியாகவும் பெறலாம்.

இதுவரை இக்கடனுதவி பெற 450 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். கொடுப்பனவுகளும்வழங்கப்பட்டுவருகின்றன 1500-2500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் உடையோர் 50,000 கடன் பெறமுடியும். இதுவரை 75 பேர் விண்ணப்பித்துள்ளனர் 2500ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தை பெறுவோர் 1,50,000 ரூபாவைக் கடனகப் பெறலாம்.

6% வட்டி அடிப்படையில் 15 வருட கால எல்லையில் கடனைத் திருப்பி செலுத்த முடியும் என்றார். (05)

புதிய அலுவலகம் கட்டுவதற்காக

## யாழ். மாவட்டக் காணிப்பதிவகம் யாழ் நகரில் காணி தேடுகிறது

யாழ் மாவட்ட காணிப்பதிவகம் கட்டுவதற்கு தகுந்த இடத்தை தெரிவு செய்யும்படி இலங்கைக் காணிப்பதிவாளர் நாயகம் யாழ்மாவட்ட காணிப்பதிவகத்தைக்கேட்டுள்ளார்.

இக்காணிப்பதிவகம் இதுவரைகாலமும் யாழ் கோட்டைக் கருகிலே இருந்துவந்தது இவ்விடம் அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது கூடியளவு பாதிப்படைவதனலே தகுந்த இடத்தைதெரிவு செய்யும்படி காணிப்பதிவாளர் நாயகம் கேட்டுள்ளார். (03)

### அன்னை பூபதி...

இந்தியா நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து அன்னை பூபதி உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார். அவரது தியாகம் மிகமுக்கியமானது. தமிழீழ விடுதலைப் போராட்டவரலாற்றில் அன்னை பூபதியின் தியாகம் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது என்றும் இக் கூட்டத்தில் மேலும் பலரும் உரையாற்றினர்.

### வீதி...

மான உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் முகமாகவும் இந்த வீதி ஒழுங்கு முறை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஒழுங்கு முறைகளை விடுதலைப்புலிகள் வரவேற்றுள்ளதோடு இதனை நடைமுறைப்படுத்த மக்கள் அனைவரும் ஒத்துழைப்புவழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். (04)

### பாக்...

கள் நெரிவித்த யோசனைகளை பாகிஸ்தானிய அமைச்சர் ஜனதிபதி தெரியப்படுத்துவார்.

எதிர்வரும் சார்க் மாநாட்டை இலங்கையிலா மாலைதீவிலா நடாத்துவது என்பது குறித்து இழுபறி இருந்து வருவது தெரிந்ததே,

உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த

அன்னை பூபதிக்கு

அஞ்சலிகள்

தமிழீழ மக்கள்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல் இலக்கத்திலுள்ள [அச்சகப்] பிரிவில் 20-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org